# பிரிவு 4 உதவி

ஏப்ரல் 2011

Section 4 support - Tamil

HAPPY TO TRANSLATE

## பிரிவு 4 உதவி என்பது என்ன?

உங்களுடைய புகலிடத்திற்கான கோரிக்கை முழுமையாக மறுக்கப்பட்டால், நீங்கள் உள்துறை அலுவலகத்திலிருந்து பெறுகிற புகலிட உதவி நின்றுபோகும். நீங்கள் உள்துறை அலுவலகத்திலிருந்து இதைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றைப் பெறுவீர்கள். எனினும் பிரிவு 4 உதவிக்கு நீங்கள் தகுதி பெறக் கூடும். பிரிவு 4 உதவி என்பது உள்துறை அலுவலகம் அளிக்கிற குறுகியகால உதவியாகும், ஆனால் அது நீங்கள் முன்பு பெற்று வந்த உதவிகளிலிருந்து பல விதங்களில் மாறுபட்டது.

1. **அஸ்யூர் அட்டை (Azure Card):** நீங்கள் ரொக்கம் எதுவும் பெறமாட்டீர்கள். உங்களுடைய வாராந்தர ஆதரவு ஒரு 'அஸ்யூர்' அட்டையில் ஏற்றப்படும். இந்த அஸ்யூர் அட்டையை அஸ்டா மற்றும் டெஸ்கோ உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை, உதாரணமாக, உணவு, குளியலறைப் பொருட்கள், சுத்தப்படுத்தும் பொருட்கள் வாங்குவதற்காக சில கடைகளில் உபயோகப்படுத்தலாம்.
2. **பகிர்ந்துகொள்ளப்படும் வீட்டுவசதி:** நீங்கள் ஒற்றை ஆளாக இருந்தால், உங்கள் பாலினத்தைச் சேர்ந்த மற்றவர்களுடன் குடியிருப்பை நீங்கள் பகிர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாகலாம்;
3. **தேர்வுரிமை இல்லாத வீட்டுவசதி:** பிரிவு 4 தங்குமிட வசதிப்படி ஒரே ஒரு குடியிருப்பு தான் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் ஏதாவது காரணத்திற்காக இந்த வழங்குதலை மறுத்தால், உள்துறை அலுவலகம் உங்களுக்கான ஆதரவை நிறுத்தக் கூடும்; மற்றும்.
4. **'உதவி மட்டும்' என்ற தேர்வுரிமை கிடைக்கப் பெறாது:** நீங்களே உங்களுக்கான குடியிருப்பு ஏற்பாட்டினைச் சொந்தமாக செய்துகொள்வதற்கு **மற்றும்** பிரிவு 4 பணம் வழங்கலுக்கான ரொக்கச்சீட்டைப் பெறுவதற்கான தேர்வுரிமை கிடையாது.

## பிரிவு 4 உதவிக்கு தகுதி பெறுபவர் யார்?

நீங்கள் கைவிடப்பட்டவராகவும் கீழ்க்காணும் கட்டளைவிதிகளில் ஒன்றிற்குத் தகுதியுள்ளவராகவும் இருந்தால், ஸ்காட்லாந்து அகதிகள் மன்றம் உங்களுக்கு பிரிவு 4 உதவிக்காக விண்ணப்பிக்க உதவக்கூடும்:

1. **புதிய புகலிடம் கோரல்/ மனித உரிமைகள் கோரல்:** உங்களுடைய சட்டப்பிரதிநிதி புகலிடம் அல்லது தாமதமான மேல்முறையீடு ஒன்றுக்கு புதிய கோரலைத் தாக்கல் செய்திருந்தால், இக்கோரிக்கை ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்க வேண்டும் மற்றும் அனுப்பப்பட்ட அனைத்து தாள்களின் பிரதிகளும் எமக்கு ஒரு பிரதி தரவேண்டியிருக்கும்;
2. **நீதிமன்ற மீளாய்வு:** உங்களுடைய சட்டப்பிரதிநிதி நீதிமன்ற மீளாய்வு ஒன்றிற்காக அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால். உங்களுடைய வழக்கறிஞரிடமிருந்து தயவு செய்து அனைத்து தாள்களின் பிரதி ஒன்றை வாங்கி வரவும்.
3. **பயணம் செய்வதற்கான உடற்தகுதியின்மை:** உங்களுடைய சொந்த நாட்டிற்கு நீங்கள் பயணம் மேற்கொள்வதைத் தடை செய்கிற மருத்துவக் காரணம் ஒன்று உள்ளது. ஆனால் இதற்கான கட்டளை விதி மிகவும் கடுமையானது. நீங்கள் 7 மாதங்கள் கர்ப்பமாக இருந்தால் அல்லது மேலும் 'பயணம் செய்யத் தகுதியில்லை' என்று மருத்துவர் ஒருவரின் எழுத்துமூலமான அறிக்கை உங்களிடம் இருந்தால் மட்டுமே இதற்கு தகுதி பெறுவீர்கள். பெரும்பாலான மருத்துவ பிரச்சினைகள் போதுமான அளவு தீவிரமானவை எனக் கருதப்பட மாட்டா.

4. **பாதுகாப்பான வழித்தடம் இல்லை:** இந்த கட்டளைவிதிக்குப் பொருந்துவது மிகவும் கடினமானது. உள்துறை அலுவலகத்தின்படி, தற்பொழுது இதற்குப் பொருந்தி வருகிற நாடு எதுவும் இல்லை. எமது ஆலோசகர்கள் அல்லது உங்களுடைய சட்டப்பிரதிநிதி இது மாறியுள்ளதா என்பதை உங்களுக்குக் கூற இயலும்; அல்லது

5. **தன்னார்வத்துடன் திரும்புதல்:** நீங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறீர்களா என்பதை உங்களால் நிரூபிக்க முடிய வேண்டும். ('உங்களுடைய சொந்த நாட்டிற்குத் திரும்பப் பயணித்தல்' என்பதை கீழே பார்க்கவும்)

**கைவிடப்படுவதற்கான அத்தாட்சி**

பிரிவு 4 உதவிக்கான தகுதி பெற நீங்கள் வேறு எந்த விதமான ஆதரவும் இன்றி இருத்தல் வேண்டும். நீங்கள் உங்களுடைய நண்பர்கள், குடும்பம் அல்லது ஒரு மதக் குழுவினரால் உதவப்பட்டிருந்தீர்கள் என்றால், அவர்களால் ஏன் உங்களுக்கு தொடர்ந்து ஆதரவு தர முடியவில்லை என்பதை விளக்க வேண்டியிருக்கும்.

இது உங்களுடைய நிலைமை என்றால், தயவு செய்து உங்களுக்கு உதவிக் கொண்டிருக்கும் நபர்களிடமிருந்து, அவர்கள் யார், அவர்கள் உங்களுக்கு எவ்வாறு உதவி வந்துள்ளனர், எவ்வளவு காலமாக, மற்றும் ஏன் அவர்களால் உதவியைத் தொடர முடியவில்லை என்பதைக் கூறுகிற கடிதங்களை எங்களிடம் கொண்டு வரவும். கடைசி அம்சம் மிகவும் முக்கியமாகும்.

**பிரிவு 4 க்கான விண்ணப்பம் எவ்வளவு காலம் எடுத்துக் கொள்கிறது?**

உங்களுடைய விண்ணப்பத்தை தயார்நிலைப்படுத்த உள்துறை அலுவலகத்திற்கு பல வாரங்கள் ஆகலாம். நாங்கள் முன்னேற்றத்தை ஒழுங்காக சரிபார்ப்போம் மற்றும் முடிவு தெரிந்தவுடன் கூடிய விரைவில் உங்களோடு தொடர்பு கொள்வோம். எனவே, உங்களுடைய தொடர்பு விவரங்கள் எங்களிடம் இருக்குமாறு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மேலும், அவை மாறினால் அது குறித்து எங்களுக்குத் தெரிவிக்கவும். நீங்கள் எமது அலுவலகத்திற்கு உங்களுடைய விண்ணப்பத்தின் முன்னேற்றத்தை சரிபார்க்க நேரில் வருவது அவசியமில்லை. நீங்கள் விரும்பினால், எங்களுடைய இலவச தொலைபேசி எண் 0800 085 6087 யில் எங்களை அழைக்கலாம் (தரைவழி தொலைபேசியிலிருந்து இலவசமாகும், ஆனால் கைபேசியிலிருந்து அல்ல).

நீங்கள் பிரிவு 4 உதவிக்காக ஏற்கப்படுகிறீர்கள் என்றால், எங்களுடைய தங்குமிட அளிப்பவரால் நீங்கள் வசிக்கப் போகும் இடத்திற்குச் செல்ல ஒரு தேதியை ஏற்பாடு செய்யும் பொருட்டு நீங்கள் தொடர்பு கொள்ளப்படுவீர்கள்.

பிரதிநிதி உங்களுக்கு இடத்தைக் காண்பித்து அவர்களுடைய தொடர்பு விவரங்களைத் தருவார். மேலும், ஒரு தங்குமிட ஒப்பந்தத்தில் கையொப்பமிடுமாறு உங்களைக் கேட்டுக் கொள்வார். உங்களுக்கு தங்குமிடம் அளிப்பவர் உங்களுடைய தங்குமிடத்தின் பராமரிப்பிற்குப் பொறுப்பாகிறார். உங்களுக்கு தங்குமிடம் பற்றிய கேள்விகள் இருக்குமானால், உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விவரங்களைப் பயன்படுத்தி உங்களுடைய பிரதிநிதியுடன் தொடர்பு கொள்ளவும்.

**மேல்முறையீடுகள்**

உங்களுடைய விண்ணப்பம் மறுக்கப்படுமானால், உங்கள் சார்பில் ஒரு மேல்முறையீடு தாக்கல் செய்ய எங்களால் இயலும். அது உங்களுக்கான ஆதரவினை மறுத்து உள்துறை அலுவலகம் தருகின்ற காரணங்களைப் பொறுத்ததாகும். லண்டனில் உள்ள க்ராய்டனை தளமாகக் கொண்ட முதலாம் நிலை தீர்ப்பாயம் என்று அழைக்கப்படும் (புகலிட ஆதரவு) தன்னிச்சையான அமைப்புக்கு மேல்முறையீடு செல்லும். நீங்கள் உங்களுடைய வழக்கில் வாதாட வேண்டுமென்றால், மேல்முறையீட்டில் நீங்கள் கலந்துகொள்வதற்குக் கேட்டுக் கொள்ளலாம். மேல் முறையீட்டில் கலந்துகொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதைச் சொன்னால் உள்துறை அலுவலகம் உங்களுடைய பயணத்திற்கும் தங்குமிடத்திற்கும் பணம் வழங்கும்.

உங்களது சொந்த நாட்டிற்குத் திரும்புதல்?

உங்களுடைய சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்கு எமது உதவி தேவைப்பட்டால், பின்வரும் முகவரியில் உள்ள இன்டர்நேஷனல் ஆர்க்கனைசேஷன் ஆஃப் மைக்ரேஷனின் (IOM) க்ளாஸ்கோ அலுவலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**International Office of Migration (IOM)**
38 Queen Street, Glasgow
முன்பதிவுக்கு அழைக்கவேண்டிய தொலைபேசி எண்: 0141 548 8116

**ஆலோசனைகளும் புகார்களும்**

உங்களுடைய கருத்துரை எப்பொழுதும் வரவேற்கப்படுகின்றன. அவை எங்களுடைய தகவல் மற்றும் சேவைகளை மேம்படுத்திக்கொள்ள எங்களுக்கு உதவிடும்.

நாங்கள் எவ்வாறு எமது தகவல் மற்றும் சேவைகளை மேம்படுத்திக் கொள்ளக் கூடும் என்பது பற்றி நீங்கள ஆலோசனை கூற விரும்பினால், தயவு செய்து எமது கருத்துரைப் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பவும்.

நீங்கள் எமது அலுவலகத்திலுள்ள பணியாளரிடமிருந்து விண்ணப்பம் ஒன்றினைப் பெறலாம் அல்லது எமது இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம்:
http://www.scottishrefugeecouncil.org.uk/assets/0000/0183/Complaint_leaflet_English_March_2010.pdf

பூர்த்தி செய்த படிவத்தை எங்கள் அலுவலகத்தில் தயவுசெய்து திருப்பித் தரவும்.

குடியேற்ற ஆணையர் அலுவலகத்திலும் (OISC) நீங்கள் புகாரளிக்கலாம்: http://www.oisc.gov.uk/